## 29.28 மக்கள் தொகையின் அடிப்படையில் பெரிய ஊராட்சிகளில் 482 கூடுதல் மக்கள் நலப் பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்துதல் மற்றும் 16 மாவட்டங்களில் ஏற்கனவே காலியாக உள்ள 994 மக்கள் நலப்பணியாளர் பணியிடங்களை நிரப்புதல்

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (இ5)த்துறை

அரசாணை (நிலை) எண்.176 நாள்: 05.12.2006

படிக்க :

1.. அரசாணை (நிலை) எண்.51, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை,நாள் 12.06.2006
2. அசாணை (நிலை), எண்.147, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5), துறை, நாள் 12.10.2006, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.41724/05/இ1, நாள் 21.08.2006 மற்றும் 28.09.2006.

**ஆணை**

படிக்கப்பட்ட 1–ல் காணும் அரசாணையில், மற்றெல்லாவற்றுடன், மக்கள் நலப்பணியாளர் பணியிடங்களை மீண்டும் ஏற்படுத்தவும், 31.05.2001–ல் பணியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப்பணியாளர்களை, ஒரு ஊராட்சிக்கு ஒரு மக்கள் நலப்பணியாளர் வீதம் 12618 ஊராட்சிகளில் 12618 மக்கள் நலப்பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. படிக்கப்பட்ட 3–ல் காணும் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள், மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் தற்போது 664 மக்கள் நலப்பணியாளர்கள் நியமனம் வேண்டி காத்திருக்கிறார்கள் எனவும், இவர்களில் 182 நபர்களை ஒரு ஊராட்சிக்கு ஒருவர் வீதம் நியமனம் செய்திருக்க இயலும் எனவும், மாவட்ட ஆட்சியர்கள் உரிய காலத்தில் விரைவாக நியமனம் செய்யாத காரணத்தால் இந்த 182 பணியிடங்களைத்தவிர்த்து 13 மாவட்டங்களில் , 482 மக்கள் நலப்பணியாளர்களுக்கு மேற்சொன்ன முறைகளில் ஒருவருக்கும் பணியிடம் வழங்க இயவில்லை எனவும், இம்மாவட்டங்களில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு மக்கள் நலப்பணியாளர் நியமனம் செய்த பின்னரும் எக்காலியிடமும் இல்லை எனவும், மற்ற மாவட்டங்களில் காலியிடங்கள் இருந்தபோதிலும் பிறமாவட்டங்களில் இவர்களுக்கு பணியிடம் வழங்க இயலாத நிலை உள்ளதாகவும், எனவே, கீழ்க்கண்டவாறு கூடுதலாக மக்கள் நலப்பணியாளர் பணியிடங்கள் தேவைப்படுவதாக தெரிவித்துள்ளார்.

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | கூடுதலாக மக்கள் நலப் பணியாளர் பதவிகள் தேவைப்படும் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | விழுப்புரம் | 30 |
| 2 | வேலூர் | 98 |
| 3 | திருவண்ணாமலை | 31 |
| 4 | தர்மபுரி | 16 |
| 5 | நாகப்பட்டினம் | 18 |
| 6 | திருவாரூர் | 16 |
| 7 | திருச்சிராப்பள்ளி | 52 |
| 8 | கரூர் | 18 |
| 9 | மதுரை | 88 |
| 10 | தேனி | 6 |
| 11 | திண்டுக்கல் | 45 |
| 12 | இராமநாதபுரம் | 21 |
| 13 | விருது நகர் | 43 |
| | மொத்தம் | 482 |

**3.** மேலும் மக்கள் நலப்பணியாளர் பணியிடங்களில் ஏற்பட்டுள்ள காலியிடங்களை நிரப்புவது குறித்து எஞ்சியுள்ள 16 மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின்படி 31.05.2001 அன்று பணியிலிருந்து தற்போது பணி கோரி விண்ணப்பித்தவர்களை பணியமர்த்திய பின்னரும் 15.09.2008 வரை இன்னமும் காலியிடங்கள் உள்ளதாவும், இம்மாவட்டங்களில் காலியாகவுள்ள மக்கள் நலப்பணியாளர் பணியிடங்களை ஒரு கிராம ஊராட்சிக்கு குறைந்தது. ஒருவரையாவது நியமிக்க வேண்டும் என்ற அடிப்படையில் கீழ்க்காணும் விபரப்படி இப்பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதி கோரியுள்ளார்.

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | 15.09.2006–அன்று மக்கள் நலப்பணியாளர்கள் பணியமர்த்தப்படாத ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 185 |
| 2 | திருவள்ளூர் | 52 |
| 3 | கடலூர் | 12 |
| 4 | சேலம் | 39 |
| 5 | நாமக்கல் | 34 |
| 6 | கிருஷ்ணகிரி | 52 |
| 7 | ஈரோடு | 58 |
| 8 | கோயம்புத்தூர் | 128 |
| 9 | நீலகிரி | 3 |
| 10 | தஞ்சாவூர் | 64 |
| 11 | பெரம்பலூர் | 43 |
| 12 | புதுக்கோட்டை | 109 |
| 13 | சிவகங்கை | 109 |
| 14 | திருநெல்வேலி | 23 |
| 15 | தூத்துக்குடி | 73 |
| 16 | கன்னியாகுமரி | 10 |
| | மொத்தம் | 994 |

**4.** மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலித்து பரிசீலனைக்குப்பின்பு மேலே பத்தி 2–ல் தெரிவிக்கப்பட்ட 482 பணியிடங்களை புதிதாக ஏற்படுத்தவும், மேலே பத்தி 3–ல் தெரிவிக்கப்பட்டுள்ள 994 காலிப்பணியிடங்களை நிரப்பவும், மேலே இக்காலிப்பணியிடங்களை நிரப்ப கீழ்க்கண்ட வழிமுறைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரை (வளர்ச்சி) உறுப்பினராகவும், தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலரை உறுப்பினர் செயலாளராகவும் கொண்ட வட்டார அளவிலான தேர்வுக்குழுவை அமைக்க வேண்டும்.

தேர்வு செய்யப்பட வேண்டியவர்களின் தகுதிகள்

அ) வயது 18 முதல் 30 வரை இருக்க வேண்டும்

ஆ) கல்வித் தகுதி 10–வது வரை படித்திருக்க வேண்டும் (மலைப்பிரதேசம் மற்றும் பழங்குடியினர் பகுதியினராக இருப்பின் 8 வது வகுப்பு முடிந்திருந்தால் போதுமானது)

இ) உள்ளூரில் விளம்பரம் செய்து உறுப்பினர் ஆட்களை நியமனம் செய்யலாம் ஆனால் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உரிய முறையில் முன்கூட்டியே முன்னனி நாளிதழ்கள் மூலம் விளம்பரம் செய்வதை உறுதி செய்யப்பட வேண்டும்.

ஈ) விண்ணப்பதாரர் அந்தந்த ஊராட்சியை சார்ந்தவராகவும், அங்கு வசிப்பவராகவும் இருக்க வேண்டும்.

உ) வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதியான ஆட்களை பெற்றுக்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

மேலும் மக்கள் நலப்பணியாளர்கள் மாறுதல் தொடர்பாக கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றுமாறும் ஆணையிடப்படுகிறது.

அ) அந்தந்த வட்டாரங்களுக்குள் மக்கள் நலப்பணியாளர்களை மாறுதல் செய்யும் அதிகாரம் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (ஊராட்சி) வழங்கப்படுகிறது.

ஆ) அந்தந்த மாவட்டங்களுக்குள் மக்கள் நலப்பணியாளர்களை மாறுதல் செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வழங்கப்படுகிறது.

இ) நிர்வாக அவசியத்தை முன்னிட்டு மக்கள் நலப்பணியாளர்களை மாவட்ட மாறுதல் செய்யும் அதிகாரம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு வழங்கப்படுகிறது.

**5.** இம்மக்கள் நலப்பணியாளர்களுக்கான மதிப்பூதிய செலவினத்தை கீழே குறிப்பிடப்படும் கணக்குத்தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**2515–00–** ஏனைய ஊரக வளர்ச்சி திட்டங்கள் **800** – ஏனைய செலவு திட்டத்தில் சேராதவை – AE – ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டம் – மக்கள் நலப்பணியாளர்கள் – 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம் (DPC 2515-00-800- AE 3347)

**6.** இவ்வாணையானது நிதித்துறையின் அ.சா.கு.எண்.75574/ஊவ/**2006**, நாள் **01.12.2006** மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்